தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆடி 16, விய - திருவள்ளுவர் ஆண்டு 2037

2006 ஆகஸ்ட் 1, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை"

வருமானம் வரக்கூடிய வழிகளை விரிவாக்கி, வளங்களையும் பெருக்கி, இடையூறுகளையும் ஆராய்ந்து நீக்கிட வல்லவனே செயலாற்றும் திறனுடையவன்.

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

1. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

Tmt. BADER SAYEED: Hon. Speaker Sir, yesterday while I was in the house, I was treated very badly. I was manhandled by the .....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு)* Sit down. (Interruption) Only today you have given a motion. It is under consideration. Kindly sit down. (Interruption) Of course, I agree with you. Please sit down. (Interruption) Of course, I agree with you. Please sit down. (Interruption) It is under consideration. Please sit down. (Interruption)

***திரு. பொ. சின்னப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திக்குளம் தொகுதியில் சிக்–குன்–குன்யா காய்ச்சலால் இரண்டு பேர் பலியாகியுள்ளார்கள்...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள்.*